மலையடிவாரத்தில் அந்தக் கோவை-புதூர் அமைக்கப்பட்டுள்ளது. சிறுவாணிக் குடிநீர் வந்தால்தான் அங்கே தண்ணீர்த் தட்டுப்பாடு இல்லாமல் இருக்கும் என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா, என்பதை அறிய விரும்புகிறேன். ஆகவே, இந்தக் கஷ்ட காலத்தில் வேறு வகையில் தண்ணீர் தருவதற்கு பிரத்தியேகமான ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றியெல்லாம் ஆலோசனை செய்து பார்க்கலாம்.

திரு ஆ. நடராசன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சிறுவாணித் திட்டம் பற்றித் தெரிவித்தார்கள். அதை நிறைவேற்றுவதற்கு இரண்டாண்டு காலம் ஆகும் என்கிற காரணத்தினால் அங்கே இருக்கக்கூடிய குழாய்க் கிணறுகளுக்கு விசை மோட்டார் பொறுத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அத்தோடு அங்கே நபர் ஒன்றுக்கு எவ்வளவு காலன் நீர் கொடுக்கப்படுகிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இதைப்பற்றி அரசுக்கு வேண்டுகோள் கொடுத்தால் பரிசீலித்துப் பார்க்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, சிறுவாணிக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக கோவை—புதூருக்கு தண்ணீர் வருகின்ற வழியிலே இருக்கக்கூடிய கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, எந்தெந்த கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்கப்படுகிறது என்ற தகவல்கள் எல்லாம் இருக்கின்றன, தனிக் கேள்வி போட்டால் அதற்குச் சரியான விடை தரலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Supply of Drinking Water in Nagappattinam Municipality

632 Q.—Thiru R. UMANATH : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(a) whether the Government are aware that the drinking water supply system in Nagappattinam Municipality is very very old leading to constant breakdown, lean supply in certain parts and no supply in certain other parts ;

1978 மார்ச் 20]

(b) whether the municipality is expressing lack of finance; and

(c) if so, the steps proposed to be taken to renovate the entire system to ensure adequate supply to all areas?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :— (அ) ஆம்.

(ஆ) இல்லை.

(இ) நாகப்பட்டினம் குடிநீர் திட்ட மேம்பாடு பணிகளுக்கான இரண்டாவது கட்ட உத்தேச மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

(முற்பகல் 9-30)

திரு. ரா. உமாநாத்: நாகப்பட்டினம் தண்ணீர் சப்ளை விஷயமாக கனம் அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். சைக்ளோன் நேரத்தில் அவரது ஸ்க்வாட் நல்ல முறையில் பணியாற்றி இரண்டு நாட்களில் 28 குழாய் கிணறுகளைப் போட்டார்கள். ஆனால் சிறிது உப்புத் தண்ணீராக இருக்கிறது. ஆய்வில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுவதால் அந்த ஆய்வை விரைவில் முடிப்பதற்கு கனம் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: எவ்வளவு விரைவில் முடிக்க முடியும் என்று தகவல் இல்லை. உறுப்பினர் அவர்கள் சொல்லிவிட்ட பிறகு, விரைவில் முடிப்பதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ரா. உமாநாத்: அதற்கிடையில் மேட்டுப்பகுதியில் தண்ணீர் வராமல் கஷ்டப்படுகிறார்கள். அங்கிருந்து அதற்காக மேட்டுப்பகுதியில் சப்ளை ரெகுலரைஸ் செய்ய ரூ. 1·2 லட்சத்திற்கு எஸ்டிமேட் போட்டு ஒரு ப்ளான் இங்கே அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த இடைக்காலத் திட்டத்தை, மேட்டுப் பகுதி மக்களைப் பாதுகாக்க நார்மல் பார்மாலிட்டிஸ் பார்க்காமல்-ஸ்பாட் டிசிஷன்ஸ் எடுப்பதில் கனம் அமைச்சர் அவர்கள் பெயர்போனவர்கள்—அது சாங்க்ஷன் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போத்திப்பாளயம் தெரு, மார்க்கட் தெரு, சாமிக் கோவில் தெரு என்று நினைக்கிறேன். தனியாக இதுபற்றி முறையீடு கொடுத்தால் பரிசீலனை செய்து பார்க்கலாம்.

[1978 மார்ச்]

திரு. எம்.ஏ. ஜெயவேலு: இதுபோல் பல பஞ்சாயத்துக்களில் ப்ரஷர் டாங்க்ஸ் பழுதடைந்திருக்கின்றன. தண்ணீர் எடுக்கமுடிய வில்லை. பல ஆண்டுகளாக அது சரிசெய்யப்படாமலிருக்கிறது. அங்கு தண்ணீர் எடுக்கமுடியாத நிலை இருக்கிறது. Water water everywhere but not a droy to drink என்று சொல்வர்கள். அது போல் இருக்கிறது. தண்ணீர் எடுக்கமுடியாத ஒரு நிலை இருக் கிறது. அதைப் போக்க காட்டிகரி 1 ல் அதைச் சேர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: If there is water everywhere that means flood and cyclone. இருந் தாலும் மெயின்டனன்ஸ் என்பது அந்தந்தப் பஞ்சாயத் துக்களும், முனிசிப்பாலிட்டிகளும் கவனித்துக் கொள்ளக்கூடியது. அதைப்பற்றி அவர்கள் சரியாகக் கவனிக்கவில்லை என்று அரசுக்கு முறையீடு வந்தால் அதைப் பற்றி அரசு கவனிக்கும்.

Industrial disputes in T. V. S. Units at Padi

* 633 Q.—Thiru R. UMANATH : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(a) whether the required notice under the Industrial Disputes Act was given by the managements of the Clayton (T V.S.) and T. V. S. Lucas, while declaring the second lockout ;

(b) whether it was a legal or illegal lockout ; and

(c) if illegal, the action taken by the Government to lift the lockout ?

மாண்புமிகு திரு, எஸ். இராகவானந்தம் :—(அ) சென்னையி லுள்ள சுந்தரம் கிளேட்டன் லிமிடெட் மற்றும் லூகாஸ் டி. வி எஸ், ஆகிய இரு நிர்வாகங்களும் கதவடைப்புக்கான அறிவிப்பைச் சட்டப்படி கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

(ஆ) (இ) கதவடைப்பு சட்ட பூர்வமானதா அல்லது சட்டத் திற்குப் புறம்பானதா என்பதை தொழில் நீதி மன்றம்தான் தீர்மானிக்க வேண்டும்.